**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**மேட்டூர்.**
**OS.No. 191/2023**
**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணமூர்த்தி | கணவர் பெயர் | : ----- |
| தகப்பனார் பெயர் | மாதையன் | வயது | : 37 |
| கிராமம் | மேட்டூர் | நாள் | : 27.03.2026 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

இன்று 27.03.2026 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை :</u>

நான் மேட்டூர் தாலுக்காவில் நகர சார் ஆய்வாளராக உள்ளேன். நீதிமன்றத்திலிருந்து சம்மன் கிடைக்கப்பெற்றதன் பேரில் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சம்மனில் குறிப்பிட்டுள்ள மேட்டூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட கீழ் குள்ளவீரன் பட்டி வார்டு A, பிளாக் 1, டி.எஸ் எண்.2/1ன் வரைபடம் மற்றும் TSLR ஆகியவை கொண்டுவந்துள்ளேன். **அந்த வரைபடம் அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல் சா.சா.ஆ.1 ஆகவும், TSLR மற்றும் தற்போதைய அடங்கல் பதிவேடு அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. TS.No.2/1ல் கண்ட மொத்த சொத்தும் ஆரம்பத்திலிருந்தே வருவாய் துறையினர் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. தற்போது அந்த நிலத்தில் மொத்தம் சுமார் 100 வீடுகளுக்கு மேல் இருக்கும். TS.No.2/1ல் கண்ட சொத்துக்கள் உட்பிரிவு செய்யப்பட்டு, அதற்கு பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. சா.சா.ஆ.1 வரைபடத்தில் நகராட்சிக்கு பாத்தியப்பட்டது என்று எந்த குறிப்பும் இல்லை.

<u>பிரதிவாதி குறுக்கு விசாரணை :-</u>

1) நீதிமன்றத்திலிருந்து சம்மன் கிடைக்கபெற்ற பிறகு சொத்துக்களை நான் நேரில் சென்று பார்த்தேனா என்றால் இல்லை, சம்மனில் ஆவணங்கள் மட்டும் கொண்டு வந்து சாட்சியம் அளிக்க கூறியிருந்ததால் பார்க்கவில்லை. இடத்தை பார்க்காமல் தான் 100க்கு மேல் வீடுகள் உள்ளது என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா

என்றால் இடத்தை நான் இதற்கு முன்பு பார்த்ததை வைத்து சொன்னேன். TS.No.2/1ல் மக்கள் பயன்படுத்துவதற்கு தார் ரோடு உள்ளதா என்றால் நகராட்சி தார் ரோடு உள்ளது. அந்த ரோட்டை பராமரிப்பது மேட்டூர் நகராட்சி தான் என்றால் சரிதான். அந்த சொத்தில் தண்ணீர், டெண்டர், மின் இணைப்பு, ரோடு பராமரிப்பு ஆகியவை மேட்டூர் நகராட்சி தான் செய்து வருகிறது என்றால் சரிதான்.

2) சா.சா.ஆ.2 ஆவணத்தில் நகர புல எண்.1க்கு பழைய புலஎண்.29/1 என்று உள்ளது என்றால் சரிதான். அதேபோல் TS.No.2/1ன் பழைய சர்வே எண்.29/2–1பா என்று உள்ளது என்றால் சரிதான். பழைய சர்வே எண்.29/1ல் இருந்து பிரிந்தது தான் பழைய சர்வே எண்.29/2–1பா என்றால் இல்லை. சா.சா.ஆ.1 வரைபடத்தில் வருவாய் துறை நிலம் என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள வீடு சா.சா.ஆ–1 வரைபடத்தில் எங்கு அமைந்துள்ளது என்று காட்ட என்ன ஆவணம் கொண்டு வரவேண்டும் என்றால் ஸ்தல ஆய்வு செய்து தான் அதை சொல்ல முடியும்.

<u>மறு விசாரணை :–</u>

சா.சா.ஆ.1 ஆவணத்தில் நகர புல எண்.2/1 என்று குறிப்பிட்டுள்ளதை வைத்து தான் நான் வருவாய் துறை கட்டுப்பாட்டிலுள்ள நிலம் என்று சொல்கிறேனா என்றால் ஆமாம்.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.